# இ - சுவடி*

# மின்னோலை பதிப்பு, பாதுகாப்பு, மின்னாடல்

(* இலத்திரன் சுவடி/மின்னோலை - electronic degital version of a Palmleaf manuscript)

நா.கண்ணன், ஜெர்மனி

---

## கட்டுரை அறிமுகம்:

பண்டை காலம் தொட்டுத் தமிழ்ப் பாரம்பரியச் சிந்தனைகள் பனையோலைகளில் எழுதிப் பாதுகாக்கப்பட்டு, பயன் பட்டு வந்தன. இவ்வோலைச் சுவடிகள் சராசரியாக 100 முதல் 150 வருடங்கள் வரை அழியாமல் இருப்பவை. இக்காலக் கட்டத்திற்குப் பின் அவை மெள்ள, மெள்ள உதிர்ந்து போய் விடுகின்றன. இக்கணக்கு கூட நன்றாகப் பதப்படுத்தப்பட்டு, பராமரிக்கப் படும் சுவடிகளுக்கே பொருந்தும். சரியான பராமரிப்பில் இல்லாத சுவடிகள் விரைவில் அழிந்து விடுகின்றன. இப்படிப் ப்ராமரிப்பற்றுப் போனவையும், போர்க் காலங்களில் அழிக்கப்பட்டவையும், சமய, தத்துவ பேதங்களினால் அழிக்கப் பட்டவையும், விபத்துக்களில் எரிந்து சாம்பலானவையும், அக்கறையின்மையால் கரையான்களின் கொடும் பசிக்கு ஆளானவையென்று அழிந்து போன தமிழ்ச் சுவடிகள் கணக்கில் அடங்காதவை. இவை போக எஞ்சிய சுவடிகளிலிருந்துதான் தமிழ் மரபின் தொன்மையும், இலக்கிய வளமும், பிற வளர்ச்சிகளும் ஆய்வாளர்களால் கணிக்கப் படுகின்றன. இப்படி மிஞ்சிய சுவடிகள் அனைத்தும் சரியான சூழலில் பாதுகாக்கப் படுகின்றனவாவெனில் இல்லை என்பதே பதில். இவையனைத்தும் சரியான முறையில் ஆய்வுக்குட்பட்டு பதிப்பிக்கப் பட்டு விட்டனாவெனில் இல்லை என்பதே பதில். இச்சுவடிகளில் ஒளிந்து கொண்டிருக்கும் பரம்பரைக் கலை, அறிவியல் நுணுக்கங்கள் இச்சுவடிகள் பதிப்பிக்கப் படாவிடில் அறியப்படாமலே அழிந்துபோகும் என்பது நிதர்சனமான உண்மை. இப்பேரழிவிலிருந்து நம் மரபுச் சிந்தனைகளைக் காக்க புதிய பல்லூடக-இணையத் தொழில் நுட்பம் கைகொடுக்கிறது. இப்புதிய வளர்ச்சி சுவடிப் பாதுகாப்பிற்கு எப்படி உதவுமென்று இக்கட்டுரையில் காண்போம்.

## சுவடி வகைகள்:

இன்றையக் காகிதப் புத்தகங்கள் போல் அன்றையச் சுவடிகள் அன்றாட தமிழ் வாழ்விற்கு பயன் பட்டு வந்திருக்கின்றன. எனவே சுவடிகள் என்பவை இலக்கிய நூல்களை எழுத மட்டும் பயன் பட்டு இருப்பதாக நினைப்பது தவறு. உதாரணமாக, தமிழ்க் கலைகளான இயல், இசை, நாட்டிய சாத்திரங்களெல்லாம் சுவடிகளில் எழுதி வைத்தே பாதுகாக்கப் பட்டன. இவை தவிர மருத்துவம், வானவியல், கணிதம், புவியியல், இரசவாதம், வரலாறு, சமயம், தோத்திரம், அகராதி, அரிச்சுவடி, இலக்கணம், இலக்கியம், நாடகம், சோதிடம், மற்றும் இந்தியப் பிரதேசத்திற்கென சிறப்பான மாந்திரீகம், ஜாலம் போன்றவையும் சுவடிகளில் காணக் கிடைக்கின்றன. பிரதேச வாரியாக கிராமியப் பாடல்கள் (கும்மி, கோலாட்ட்ம், குலவைப் பாடல்கள், பாணர்களின் பாடல்கள்), பாட்டி வைத்தியம் போன்றவையும் கூட ஓலையில் பதிவாகியுள்ளன. இப்படிப் பட்ட, பதிப்பிக்கப் படாத ஓலை சுவடிகள் சுமார் 10 லட்சத்திற்கு மேல் என்று ஜெர்மானிய இந்தியவியலார்கள் கருதுகின்றனர். தமிழ் மரபுச் சுவடிகள் தமிழகம் தவிர்த்து கேரளா, கர்னாடகம், ஆந்திர மாநிலங்களிலும் காணக் கிடைக்கின்றன.

உதாரணமாக மருத்துவம் என்ற துறையில் பல்வேறு சுவடிகள் உள்ளன.

1] நூல் ஆசிரியரின் பெயரில் அமையும் சுவடிகள் உண்டு.

அகத்தியர் குருநூல்,
அம்பிகானந்தர்முப்பூ
இராமதேவர் தண்டகம்
கருவூரார் வைத்தியம்
கொங்கனர் கற்பம்
நந்திதேவர் பெருநூல்

2] மருந்து வகைகளின் பெயரில் அமையும் சுவடிகள் உண்டு

கற்பம்,
கியாழம்
குளிகை
சரக்கு
சூரணம்
தைலம்
லேகியம்

3] நோய்களின் பெயரில் அமையும் சுவடிகள் உண்டு

குன்மரோக சிகிச்சை
நயனரோக சிகிச்சை
வாதரோக சிகிச்சை

4] துறைப் பெயர்கள் உண்டு

குழந்தை வாகடம்
பால சிகிச்சை
மகளிர் மருத்துவம்
மாட்டு வாகடம்

5] பொதுவகையில் சேரும் சுவடிகள் உண்டு

அனுபவ வைத்தியம்
பதார்த்தகுண சிந்தாமணி
வைத்திய சிந்தாமணி

பெரும்பாலான பாரம்பரியச் சிந்தனைகள், உதாரணமாக கட்டிட சாத்திரம் (வாஸ்து), ஜோதிடம், மாந்திரீகம், சமயம், தத்துவம் போன்றவை சமிஸ்கிரத, தெலுங்கு மொழிகளில் கிரந்தத்தில் எழுதப் பட்டு உள்ளன. தமிழ் மொழி வரி வடிவங்கள் பல்லவ, சோழ, பாண்டிய காலங்களிலும், வீரமாமுனிவர் போன்ற 20 நூற்றாண்டு அறிஞர்கள் காலங்களிலும் மாறியே வந்துள்ளன. இதனைப் படித்து அறிந்து கொள்ள பாரம்பரியப் பயிற்சியும், திறமையும் தேவை. மேலும் நாடி சோதிடம் சொல்லும் சுவடிகளைப் படித்துப் புரிந்து கொள்ளுதல் குடும்ப இரகசியமாக இன்றளவும் வைத்திருப்பதை அறியலாம்.

## சுவடிப் பாதுகாப்பகங்கள்:

பல நூற்றாண்டுகளாக தனி மனித ஆர்வத்தால் சேகரிக்கப் பட்ட சுவடிகள் பல்வேறு

நூலகங்களில் பாதுகாக்கப் பட்டு வருகின்றன. தமிழகத்திலுள்ள முக்கிய பாதுகாப்பகங்கள் பின் வருவன:

அட்டவணை 1. தமிழ்ச் சுவடிகள் காப்பகங்கள்

| காப்பகம் | எண்ணிக்கை |
|---|---|
| அரசினர் சுவடி நூலகம், சென்னை | 14854 |
| தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சை | 4650 |
| உ.வே.சா. நூலகம், சென்னை | 3143 |
| சுவடி நூலகம், திருவனந்தபுரம | 3281 |
| சரசுவதி மகால், தஞ்சை | 2122 |
| கீழ்த்திசை மொழி ஆய்வு, திருப்பதி | 1181 |
| பிரெஞ்சு நிறுவனம், புதுவைI | 1000 |
| சித்த மருத்துவ நிலையம், சென்னை | 600 |
| உலகத்தமிழ் ஆராச்சி நிறுவனம், சென்னை | 400 |
| தேசிய நூலகம், கொல்கத்தா | 335 |
| தமிழ்க் கல்லூரி, பேரூர | 300 |

இது தவிர தமிழ்/இந்திய மொழி ஓலைச் சுவடிகள் இங்கிலாந்து, பிரான்சு, நெதர்லாந்து, ஜெர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் சேகரிக்கப்பட்டுள்ளன.

## சுவடிப் பாதுகாப்பு:

சுவடிகளை அதன் பௌதீக உருவில் நீண்ட காலம் வைத்திருத்தல் இயலாது. எத்தனைதான் குளிரூட்டப் பெற்ற அறைகளில் பாதுகாத்தாலும் அது காலத்தால் அழியக் கூடியதே. இந்த இயற்கை விதிக்கு ஒரு மாற்றை நவீன தொழில் நுட்பம் தருகிறது. இச்சுவடிகளை microfische என்றழைக்கப்படும் புகைப்படமாக மாற்றி வைத்துக்கொள்ளுதல் ஒரு முறை. இம்முறையில் படம் பிடித்த பிலிம்களை வாசிக்கத் தனிப் பொறிகள் தேவை. இதை நூலகங்கள் வாங்கி பயன் படுத்தலாமே தவிர தனி மனிதப் பயன்பாட்டிற்கு இம்முறை பயன் படாது. ஆயின், கணனி வழித் தகவலாக digitize செய்து விட்டால் அத்தகவலை எல்லோரும் அவரவர் அகக் கணனி மூலம் வாசித்து மகிழ முடியும். கணனிகள் ஆய்வகங்களிலும், நூலகங்களிலும், வீடுகளிலும் ஒரே முறையில் பயன் படுத்தப்படுகின்றன. மிகத்துல்லிய அளவில், மேசை வருடி (flatbed scanner) மூலம் சுவடிகளை தெளிவான வகையில் நகல் செய்ய முடியும். இது மூலத்தைக் காட்டிலும் தெளிவாக அமையும்.

## கணனி நகல்களும் அதன் பயன்பாடும் (digital images and their use)

இத்தகைய நகல்களை எளிதாகக் கணனித் (தனித்) திரையில் வாசிக்க முடியும். முதல் முறையாக சுவடிகளை அச்சில் காணும் வாய்ப்பும் (print -professional/laptop publication) இதனால் சாத்தியப் படுகிறது. மேலும் பல்லூடக உருமாற்றப்பட்ட தரவுகள் (multimedia presentation) வாயிலாக ஒரு துறையைச் சார்ந்த பல்வேறு அறிஞர் குழாம் ஒரே நேரத்தில் சுவடியைக் கண்டு ஆய முடியும். திரையில் தோன்றும் எழுத்து பெரிதாக இருப்பதால் பூதக் கண்ணாடிகள் இல்லாமலே பெரியவர்களும் வாசித்துப் பொருள் விளங்க முடியும். சுவடிகளின் மூலத்தை அது இருக்கும் இடத்திலிருந்து நகர்த்த வேண்டிய அவசியமில்லை. இம்முறையால்,

ஐரோப்பிய நூலகங்களிலுள்ள நமது சுவடிகளை பிரச்சினையில்லாமல் திரும்பப் பெற முடியும். இதே முறையால், தமிழகத்திலுள்ள ஒரு அரிய சுவடியை அத்துறையில் பயிற்சி பெற்ற மேல் நாட்டு அறிஞர் ஒருவர் நாடு விட்டு நாடு போகாமல் வாசித்து கருத்து சொல்ல முடியும். மிக அதிக இடம் பிடித்தாலும், இத்தகைய சுவடி நகல்களை பதிவு செய்யும் காந்தக் குறுந்தகடுகள் (CD ROMs, VCDs, Optical Discs, Hologram Discs) தற்கால தொழில் நுட்பத்தில் குறைந்த விலையில் வாங்கக் கூடியதாவே உள்ளன.

## பதிப்பு, மின்னாடல் [Publishing (e-publication inclusive) and e-group dialogues]

பாதுகாப்பான நகல் எடுத்த பின் முறையாக அறிஞர்கள் உதவியுடன் பதிப்பிக்கப் பட வேண்டும். உம். கம்ப இராமாயணப் படிகள் கிடைத்தால், வெவ்வேறு பிரதேசப் படிகளையும் (regional editions) பொதுப் படியென்ற ஒன்றையும் வெளியிட வேண்டும். கம்ப இராமாயணப் பொதுப்படியொன்றை வெளியிட அண்ணாமலை பல்கலைக் கழகத்திற்கு சுமார் 12வருடங்கள் பிடித்தன. அப்படியெனில், தமிழின் பல்வேறு காப்பியங்களின் பல்வேறு படிகளையும், பொதுப் படிகளையும் வெளியிட எத்தனை ஆண்டுகள் பிடிக்கும் என்று கணக்குப் போட்டால் இத்திட்டத்தின் கால அளவு ஒரு வகையில் பிடிபடும். கிராமம், கிராமமாகப் போய்த் தேடினால் காணாமற் போன வளையாபதி, குண்டலகேசி போன்ற நூல்கள் கூடக் கிடைக்கலாம். இதுவரை அறிந்திராத பல நூல்களும் கிடைக்கலாம். ஏனெனில், இருக்கும் சுவடிகளின் பட்டியல் இதுவரை முழுவதுவதுமாக வந்த பாடில்லை (உள் நாட்டு, வெளி நாட்டு சுவடிகள் இதில் அடங்கும்).

மரபு எ ன்பது வாழ்வதாலேயே இருத்தப்படுகிறது. எ னவே சுவடிகளை கணனிப் படுத்தி தக்க வைத்தால் மட்டும் போதாது. அதை பல்வேறு ஊடகங்களின் வாயிலாகப் பிரபலப் படுத்தி சுவடிகளின் பயனை அதிகரிக்க வேண்டும். இதற்குத் தோதாக, இணைய வழி மடலாடல் அமைகிறது. சுவடி மடலாடற் குழுக்களை உருவாக்கி சுவடிகளை இரகசியத் திரட்டாக வைத்திராமல், பொது மக்கள் பார்வைக்கும் கொண்டு வந்து சுவடி தரும் இன்பத்தை, ஞானத்தை எல்லோரும் சுகிக்கும் வண்ணம் செய்யவேண்டும்.

## திட்டம்:

சர்வ தேச அளவில், புகலிடத் தமிழர்களும் பங்கேற்கும் வகையில் திட்டம் வகுத்து, மானியம் வாங்கி பாதுகாத்து, பதிபிக்க வேண்டும். தமிழகத்தில் மற்றும் பல்வேறு ஐரோப்பிய நகரங்களில் பதிப்பகங்களை உருவாக்க வேண்டும். நடமாடும் பதிவுக் கேந்திரங்களையும் உருவாக்க வேண்டும். இவ்வகையில், குடும்பச் சொத்தாக உள்ள சுவடிகளை இருக்கும் இடத்திற்குச் சென்று பதிவு செய்ய முடியும். ஒரு கால கட்டத்தில் இதை ஒரு மக்கள் இயக்கமாக்கி நமது மரபுச் சிந்தனைகளை பாதுகாக்கும் மகிழ்ச்சியை ஒவ்வொரு தமிழனுக்கும் தர வேண்டும். தொழில் நுட்பமும், மரபும் கை கோர்த்து பீடு நடை போடும் நாள் அதிக தூரத்தில் இல்லை.